www.tamilarangam.net

# நாம் ஏன் தேர்தலில் பங்குபற்றுகின்றோம்

சகல விடுதலை இயக்கங்களின் உறுதியான போராட்டத்தினால் மிகவும் முனைப்புடன் முன்னேறிவந்த ஈழவிடுதலைப் போராட்டமானது, தமிழீழ விடுதலைப்புலிகள் ஏனைய இயக்கங்களான TELO, PLOT, EPRLF போன்றவற்றின் மீது நடாத்திய தாக்குதல்களினால் பின்னடைந்தது. வடக்குகிழக்கின் பெரும்பாலான பிரதேசங்கள் இயக்கங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது என்ற நிலைமாறி சிறிலங்கா அரசாங்கம் பல பிரதேசங்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. இறுதியாக வடமராட்சியும் சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. யாழ்ப்பாணத்தையும் இழந்தால் இலங்கை அரசிடம் தாம் பேரம் பேசமுடியாத சூழ்நிலை ஏற்படும் என்றதன் பின்னரே இந்திய அரசு போர்விமானங்களின் துணையுடன் சாப்பாட்டுப் பொருட்களைப் போட்டு இலங்கை அரசை மிரட்டியது இதனைத் தொடர்ந்து இலங்கை அரசும், இந்திய அரசும் ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கிக் கொண்டன. தமிழீழ விடுதலைப்புலிகள் இவ்வொப்பந்தத்தை அங்கீகரித்தனர். அதன் காரணமாக, மாதாந்தம் 50 லட்சம் ரூபாவை (இந்திய ரூபாய்படி) தரவும் இந்திய அரசு சம்மதித்து முதல்தவணையான 50 லட்சம் இந்திய ரூபாய் பண்ருட்டி இராமச்சந்திரன் என்கின்ற தமிழக அமைச்சர் மூலம் புலிகளிற்கு வழங்கப்பட்டது. அவர்களும் அதனை மனமுவந்து பெற்றுக்கொண்டனர். இதனைத் தொடர்ந்த நிகழ்ச்சிகளின் ஒரு அங்கமாகவே இடைக்கால நிர்வாகம் அறிவிக்கப்பட்டது. இதனையும் தமிழீழ விடுதலைப்புலிகள் பெருந்தன்மையுடன ஏற்றுக் கொண்டனர் அது மாத்திரமில்லாமல் EPRLF, TELO, PLOT போன்ற அமைப்புகளிற்கு இடைக்கால நிர்வாகதுதில ஓர் அங்கத்துவமும் கொடுக்கக் கூடாது என்ற உறுதிமொழியையும போராடி பெற்றனர். இதிலிருந்தே தமிழீழவிடுதலைப்புலிகள் தமது தமிழீழப போராட்டத்தை எப்பொழுதோ கைவிட்டுவிட்டனர் என்பதை நாம்புரிந்து கொள்ளமுடியும்.

அதே சமயம் மறுபுறத்தில் என்று TELO இயக்கம் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் கொடிய யுத்தத்தை தொடுத்து அதனை அழித்தொழித்தனரோ அன்றே தமிழீழ விடுதலை எனபது திசைமாறிவிட்டது என்பதை நாம் புரிந்து கொண்டோம். போராட்டம் வெறும் சுயநலக்கும்பலினால் சீரழிக்கப்பட்டது. பல்வேறுபட்ட இயக்கப்போராளிகள் மாத்திரமல்லாமல் பல அப்பாவிப பொதுமக்களும கூட புலிகளால் கொடூரமாக கொலை செய்யப்பட்டனர். பிரபாகரன திரும்பும் பக்கமெல்லாம் தன்னைக் கொலைசெய்ய பல பேர் முயற்சி செய்வதாகவே உணர்ந்தார். இதனால் ஏனைய இயக்கங்கள் அதன் ஆதரவாளர்கள் தனது விரோதிகள், என்று கருதுவோர் சகலரையும் கொலை செய்ய உத்தரவிட்டார். இவை ஒரு புறம் நடந்து கொண்டிருக்க சிறிலங்கா அரசின் கொடூரத் தாக்குதலினால் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் மிருகத்தனமாக கொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்தனர். மிகவும் வீராதி வீரர்களாக தம்மைக் காட்டிக் கொண்ட புலிகள் மக்களைக் காப்பாற்ற முடியாமல் வடமராட்சியை விட்டும் வெளியேறினர்.

இத்தருணத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தைத்தான் நாமும் ஏற்றுக் கொணடோம் ஆனால் அவ்வொப்பந்தம் தமிழ்மககளின் அபிலாசைகளை, அவர்களின் அடிப்படை உரிமைகளை அங்கீகரிப்பதாக நாம் கருதவில்லை. இவ்வொப்பந்ததில் உள்ளகுறைபாடுகளை EPRLF, TELO, PLOT, ENDLF போன்ற இயக்கங்கள் அன்றே இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு விளக்கமாக கூறிஇருந்தனர் எந்தவித அதிகாரமும் இல்லாத ஓர் கண்துடைப்புத்தான் இது என்பதை நாம் புரிந்து கொண்டோம். இருந்த போதும் இவ்வொப்பந்தத்தை நாம் ஆதரித்தோம், முக்கிய

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாக அர்த்தமற்ற கொலைகளை முடிவுக்கு கொண்டுவந்து ஓர் தற்காலிக அமைதியையாவது ஏற்படுத்தலாமென்று நம்பினோம். இதன்மூலம் தமிழ் பேசும் மக்கள் தமது போராட்டத்தில் விட்டகுறைபாடுகளை புரிந்து கொண்டு அவற்றை நிவர்த்தி செய்து போராட்டத்தைச் சரியான திசைவழியில் இட்டுச்செல்ல இப்படியான ஒரு இடைக்கால அமைதியாவது அவசியமாய் இருந்தது.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகளின் அராஜகமும் ஜனநாயக வழிமுறையின் மேல் கொண்ட நம்பிக்கையின்மையும் இன்னும் ஓர் இரத்தக்களரியை இங்கு ஏற்படுத்தியது. ஆயிரக்கணக்கான மக்கள் அநியாயமாக சுட்டுத் தள்ளப்பட்டார்கள். பதவி வெறி, பணம், புகழுக்கான சுயநலப் போராட்டத்தை தமிழீழப் போராட்டம் என்று காட்ட முனைந்து செயல் பட்டனர், செயல்பட்டும் வருகின்றனர். இவர்களிற்கு எதிராக வாய் திறப்பவர்கள் யாவரும் துரோகிகள் என்ற வரிசையில் சுட்டுக்குவிக்கப் பட்டனர். தமது பொம்மைகளான சில பிரஜைகள் குழுக்கள் மூலமும் தமது கட்டுப் பாட்டிற்குள் இருந்த பத்திரிகைகள் மூலமும் தாம் தமிழீழதிற்காகவே போராடுவதாக பொய்ப் பிரச்சாரமும் மேற்கொண்டனர். இதன் மூலம் மக்கள் தமது பக்கமே இருக்கின்றார்கள் என்ற மாயையையும் உருவாக்கினர். ஜனநாயகம் என்பது குழிதோண்டி புதைக்கப்பட்டது.

மறுபுறத்தில் இந்திய இலங்கை அரசுகள் தமது இஷ்டப்படி செயல் படத் தொடங்கின தமிழீழ மக்களின் பிரச்சினைகள் அவர்களின் ஆலோசனை இன்றியே கையாளப்படும் நிலை ஏற்பட்டது. தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தலைமை என்பது இல்லை என்ற நிலை ஏற்பட்டது. இச்சந்தர்ப் பத்திலேயே நாம தேர்தலில் பங்குபற்றுவதென உறுதியான தீர் மானத்தை மேற் கொண்டோம். தேர்தலில EPRLF வெற்றி பெறவேண்டும் என்பது எமது நோக்கமல்ல, சரியான ஒரு அரசியல் தலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். மக்கள் தங்கள் சொந்தக்கருத்துக் களை வெளியிடக் கூடிய ஜனநாயகச் சூழல் தோற்றுவிக்கப்பட வேண்டும், மக்கள் கொலைகளிலும், இரத்தக்களரியில் இருந்தும் விடுபட்டு அமைதியான வாழ்வை தொடங்கவேண்டும். மக்கள் தமது உண்மையான தலைமை இதுதான் என்பதை உலகிற்கு உணர்த்தவேண்டும். இவற்றிற்கு ஒரேவழி தேர்தல் மாத்திரமே. எனவேதான் தேர்தலை நாம ஏற்றுக்கொண்டோம். நாம் அதில் பங்கு பற்றினோம். துர்அதிஷ்டவசமாக புலிகளும், அவர்களின் சகபாடிகளும் இச்சந்தர்ப்பத்தையும் கைநழுவவிட்டனர். இது ஜனநாயகத்தின் மேலும், மக்கள் மேலும் அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையீனத்தையே காட்டுகிறது. இப்படியான அராஜகச் சக்திகளிற்கெதிராக போராட வேண்டியது ஒவ்வொரு தமிழ் மககளினதும் கடமையாகும்.

பிறந்தவர்கள் அத்தனைபேரும் இறப்பது உலகநியதி. அது இயற்கை மரணமாகவும் இருககலாம். செயற்கை மரணமாகவும் இருக்கலாம், எனவே உஙகள் வீட்டுக்கதவுகளையும் கொலைகாரர்கள் தட்டுமுன் இதற்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். சமாதானம் வேண்டும், அமைதி வேண்டும் என்று கூச்சல் போடுவதுடன் சமாதானம் வந்துவிடாது. சமாதானத்திற்கு கெதிரான சக்திகளிற்கெதிராக விடாப்பிடியான போராட்டத்தை நடாத்துவதன் மூலமே சமாதானத்தை உருவாக்க முடியும். இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு எழும்போது துப்பாக்கி சனியன்கள் தூரத்தியடிக்கப்படும். எனவே உங்கள் ஒவ்வொருவரின் உயிரிற்கும் ஆபத்து வரும் வரை உங்களிற்கு எந்தப்பிரச்சினையும் இல்லை என்றிருக்காமல் சகல மக்களது உயிர்களையும் காப்பாற்ற, கொலைகாரக் கலாச்சாரத்தை முடிவுக்கு கொண்டுவர, மக்களின் புனர்நிர்மாண வேலைகளை சரியான முறையில் செல்படுத்திட இவற்றிற் கெதிரான சக்திகளிற் கெதிராக உறுதியுடன் போராடுங்கள்.

"எமது உழைப்புக்கள் அனைத்தும் மக்களின் விடுதலைக்கே"

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

(EPRLF)

யாழ் பிராந்தியம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்